**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, சேலம்</u>**

**முன்னிலை: திருமதி.க. தங்க கார்த்திகா, B.Sc., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண்.3, சேலம்**

**2024 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 1144 / 2022**
**<u>CNR.NO.TNSA04-010911-2022</u>**

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : தமிழக அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>செவ்வாய்பேட்டை காவல் நிலையம்,<br>சேலம் மாவட்டம்.<br>குற்ற எண். 42/2022. |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : பிரதாப் (எ) போர்மேன் பிரதாப் (32/2022),<br>த/பெ. ராஜா,<br>கஸ்தூரிபாய் தெரு,<br>ATC பஸ் டிப்போ அருகில்,<br>கிச்சிப்பாளையம்,<br>சேலம் மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | : எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 380, 457 ன் கீழ் குற்றம் முறையிடப்பட்டது. |
| குற்றம் வனையப்பட்டது | : எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 380, 457 ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டது. |

தீர்மானம் : எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 380, 457ன் கீழ் குற்றவாளி அல்ல.

முடிவு : இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 380, 457ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் சி.பி.எண்.39/2022-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான பணம் ரூ.2,500/-அதன் உரிமையாளரான அசா.1 திரு. நித்யானந்தம் த/பெ. வாசுதேவன் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மேல் முறையீடு இல்லையெனில் அவரே அதை தொடர்ந்து வைத்துக் கொள்ளவும் பிணை தானாக ரத்தாகவும் மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்படவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கு 13–12–2022ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 18.03.2024ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை.II அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பூபதி, அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(18.03.2024)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

**1) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : –**

கடந்த 05.02.2022ம் தேதி இரவு 22.15 மணி சுமாருக்கு சேலம் மாநகரம் செவ்வாய்பேட்டை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட வாதி நித்யானந்தத்திற்கு சொந்தமான குகை, லைன் ரோடு, சிவசக்தி காபி பார் கடையில் எதிரி பிரதாப் (எ) போர்மேன் பிரதாப் என்பவர் தன் சுயலாபம் கருத வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், குற்றம் செய்யும் செய்யும் நோக்குடன் மேற்படி கடையின் ஷட்டர் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து கல்லாப்பட்டியில் இருந்த பணம் ரூபாய் 3,500/– ஐ ஆதாயம் கருதி திருடிச்சென்றதாக எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 380, 457ன் கீழ் செவ்வாய்பேட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச பிரிவு 207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்ட பின்பு எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 380, 457ன் கீழ் குற்றங்கள் பற்றி வினவியபோது எதிரி குற்றங்களை மறுத்தார். வழக்காவணங்களை பரிசீலித்தும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், முதல் நோக்கு வழக்கு இருந்த காரணத்தினால், எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 380, 457ன் கீழ் குறிப்பான குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போதும் எதிரி "இந்த வழக்கை வேண்டுமானால் நான் ஒத்துக்கொள்கிறேன். எனக்கு இருக்கிற வழக்கை case ஐ முடித்துக்கொடுங்கள். நான் ஒப்புக்கொள்கிறேன். இனி தவறு செய்ய மாட்டேன். எனக்கு வக்கீல் வைத்து வாதாடவும் வசதி இல்லை. என் வாழ்க்கை வாழ விரும்புகிறேன். அதனால் தான் ஒத்துக்கொள்கிறேன். " என்று கூறிவிட்டு பின்பு அவர் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஒன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து குவிமுச.313(1)(ஆ) பிரிவின் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், இந்த வழக்கிற்கும், எனக்கும் சம்மந்தம் இல்லை என்றும், தனது தரப்பில்

சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

## 5) தீர்வுக்குரிய பிரச்சனை :–

i) எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 380, 457 ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii) அவ்வாறு குற்றம் நிரூபிக்கபட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

6) இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7) அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிருபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:–**

i) அசா.1 இவ்வழக்கின் நிகழ்வுநிலை புகார்தார் ஆவார். இவரது சாட்சியத்தின்படி டீ கடை வைத்திருப்பதாகவும், 2022 ம் வருடம் இரண்டாவது மாதம் ஒரு நாள் வழக்கம் போல காலை 05.00 மணியளவில் கடையை திறப்பதற்காக வந்து பார்த்தபோது கடையின் சட்டர் ஒரு பக்கம் தூக்கி இருந்ததால் உள்ளே சென்று பார்த்தபோது ட்ராவில் வைத்திருந்த பணம் ரூ.3,500/– காணவில்லை என்பதால் புகார் அளித்தாகவும், போலீசார் பணத்தை மீட்டதன்பேரில் அடையாளம் காண்பித்ததாகவும், கொஞ்சம் வேலை இருந்தததால் ஊருக்கு சென்று

விட்டு 3 நாட்கள் கழித்து வந்து புகார் அளித்ததகாவும் கூறியுள்ளார். அசா.1ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில் இவர் உடனடியாக புகார் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

ii) அசா.2 கேள்விநிலை சாட்சியாக அரசு தரப்பு சாட்சிப்பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் வழக்கம்போல 6ம் தேதி 2 வது மாதம் 5 மணிக்கு அசா.1ன் கடை வாசலை பெருக்குவதற்காக சென்றபோது கடையின் கதவு ஒரு புறம் திறந்த நிலையில் இருந்ததால் கடை உரிமையாளரான அசா.1ன் மனைவி யசோதா அவர்களுக்கு போன் செய்து தெரிவித்ததாகவும் கூறியுள்ளார். இவரது சாட்சியத்தை பரிசீலிக்கையில் இவர் தகவல் கூறிதான் அசா.1 வந்து பார்த்துள்ளார் என்பது தெரியவருகிறது. எனினும் இவரது சாட்சியத்தை வைத்து முடிவு செய்ய இயலாது என்பதால் மற்ற சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

iii) அசா.3 பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பு சாட்சிப்பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் இவரது சாட்சியத்தில் ஒரு வருடத்திற்கு முன்பு இரவு வேளையில் வேலையை முடித்துவிட்டு செவ்வாய்பேட்டை காவல் நிலையம் வழியாக வந்தபோது சிவசக்தி காபி பார் கடை முன்பாக போலீசார் விசாரித்துக்கொண்டிருந்ததாகவும், அவர்கள் கையொப்பம் கேட்டதால் செய்து கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, போலீசார் சம்பவயிடத்தில் விசாரித்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது.

iv) அசா.4 ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக அரசு தரப்பு

சாட்சிப்பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் 10.02.2022ம் தேதி 11.00 மணியளவில் சேலம், குகை அருகே சென்றுக்கொண்டிருந்தபோது போலீசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்ததாகவும், அவரிடம் இருந்து பொருட்களை போலீசார் வாங்கியதாகவும், ஆனால், அது என்னவென்று தெரியவில்லை என்று ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், எதிரியிடமிருந்து சான்றுப்பொருள் கைப்பற்றப்பட்டதா என்பது குறித்து நம்பும்படியான சாட்சியம் அளிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

v) அசா.5 மற்றும் அசா.6 சாட்சிகள் புலன் விசாரணை அதிகாரிகள் ஆவார்கள். இவர்களில் அசா.5 தனது சாட்சியத்தில் 09.02.2022ம் தேதி இரவு 22.15 மணியளவில் அசா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று குற்ற எண். 42/2022 ச/பி. 380, 457 இதச வழக்கு பதிவு செய்து வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அசா.ஆ.3) மற்றும் மாதிரி வரைபடம்(அசா.ஆ.5) தயார் செய்து சம்பவயிட சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்து, புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் வழக்கு கோப்பை வைத்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அசா.6 தனது சாட்சியத்தில்

இவ்வழக்கு கோப்பை பெற்று எதிரியை கைது செய்து அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து வழக்கு சொத்தை கைப்பற்றி எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

vi) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்கையில் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும்இல்லாததாலும், வழக்கு சொத்து எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதா என்பது குறித்து நம்பும்படியான சாட்சியம் அளிக்கப்படாததாலும், அசா.1 புகார் அளிக்க ஏற்பட்ட காலதாமதம் குறித்து நம்பும்படியான காரணம் அளிக்கப்படாததாலும் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 380, 457ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கபடவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

Vii) இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 380, 457ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக

விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

viii) இவ்வழக்கில் சி.பி.எண்.39/2022—ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான பணம் ரூ.2,500/—அதன் உரிமையாளரான அசா.1 திரு. நித்யானந்தம் த/பெ. வாசுதேவன் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மேல் முறையீடு இல்லையெனில் அவரே அதை தொடர்ந்து வைத்துக் கொள்ளவும் பிணை தானாக ரத்தாகவும் மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்படவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் திங்கட்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G THANGA KARTHIKA
Digitally signed by G THANGA KARTHIKA
Date: 2024.03.18 11:16:07 -0300

**நீதித்துறை நடுவர் எண்.3,**
**சேலம்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:—</u>**

அ.சா.1 — திரு. நித்தியானந்தம்

அ.சா.2 — திருமதி. லதா

அ.சா.3 — திரு. பாலாஜி

அ.சா.4 — திரு. ராமலிங்கம்

அ.சா.5 — திரு. வீரன்

அ.சா.6 — திரு. கணேசன்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

அ.சா.ஆ.1 – புகார் மனு

அ.சா.ஆ.2 – களவு செய்யப்பட்ட பொருளின் புகைப்படம்

அ.சா.ஆ.3 – பார்வை மகஜர்

அ.சா.ஆ.4 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.6 – ஒப்புதல் வாக்குமுலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.7 – கைப்பற்றுதல் மகஜர்

அ.சா.ஆ.8 – படிவம் 91

**அரசு தரப்பு சான்றுபொருள்:-**

பணம் ரூ.2,500/-

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:-**

இல்லை

**குறிப்பு :-**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

4. எதிரிக்கு தீர்ப்பின் நகல் இலவசமாக வழுங்கப்பட்டது.

G THANGA KARTHIKA

Digitally signed by G THANGA KARTHIKA
Date: 2024.03.18 11:16:14 -0300

**நீதித்துறை நடுவர் எண்.3,**
**சேலம்.**